09.12.2024

அ.வ.எண். 529-2017

வாசா.4 - வேலுச்சாமி

2 முதல் 12ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் DIPLOMA படித்துள்ளேன். நான் சரவணம்பட்டியில் விவசாயம் செய்து வருகிறேன். நான் இருகூர் எம்.ஜி.ஆர்-புரத்தில் குடியிருந்ததை காட்ட ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. 1ம் பிரதிவாதி பழனிச்சாமி தெரிந்த நபர். 03.11.1999 தேதியில் வா.சா.ஆ.5 ஆவணம் எழுதப்பட்டிருந்தால் நான் 27.10.1999 தேதியில் பழனிச்சாமி கிரயம் பெற்றிருக்க முடியாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 ல் அசல் ஆவணம் என் மூலம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு தெரியவில்லை. வா.சா.ஆ.5 ஆவணம் வழக்கு சொத்து சேர்த்து எழுதப்படவில்லை என்றால் நான் கையொப்பம் மட்டும் தான் செய்தேன், வேறு விவரங்கள் தெரியாது. வா.சா.ஆ.6 ஆவணம் 27.10.1999 ல் எழுதப்பட்டது என்றால் ஆமாம். மேற்படி வா.சா.ஆ.5 மற்றும் 6 ஆவணத்தின் அசலை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் தான் என்னுடைய சாட்சி கையொப்பம் பொறுத்து என்னுடைய சாட்சி ஏற்றுகொள்ள முடியும் என்று சொன்னால் சரியல்ல. பொதுவாக ஒரு கிரயம் நடைபெறும்போது அதற்கு முந்தைய தாய் பத்திரங்கள் கிரயம் பெறும் நபரிடம் ஒப்படைக்கப்படும் என்றால் ஆமாம்.

மேற்படி பழனிச்சாமி வசம் இந்த கிரய ஆவணங்களோ அல்லது அதற்கு முந்தைய ஆவணங்களோ இல்லை என்றும் அதனால் தான் அவரால் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியவில்லை என்றால் சரியல்ல. நான் பழனிச்சாமியின் நண்பர் என்பதால் அவருடன் சேர்ந்து வா.சா.ஆ.5 மற்றும் 6 ஆவணத்தை போலியாக உற்பத்தி செய்துள்ளோம் என்றால் சரியல்ல. மேற்படி ரூ.90,000/- கொடுத்ததற்கு தனியாக ஆவணங்கள் எதுவூம் ஏழுதி வாங்கினார்களா என்றால் நேரடியாக கொடுத்ததால் ரசீதுகள் வாங்கவில்லை. மேற்படி தொகை எதுவும் கைமாறாமல் நான் வழக்கிற்காக பொய் சாட்சியம்

அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய சாட்சி கையொப்பத்தை நிரூபிக்கும் விதமாக எந்த அசல் ஆவணமும் நான் தாக்கல் செய்யாததால் என்னுடைய சாட்சியம் ஏற்று கொள்ள கூடாது என்றால் சரியல்ல.

16, 17 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணைக்கு வேறு ஒரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

Sd/வேலுச்சாமி

Taken down by me to open court read over to the witness and acknowledged by her to be corrected.

Sd/Renuga
District Munsif,
Sulur